அ.வ.எண். 38/2024 நாள். 09.12.2024

வா.சா.2. வின்செண்ட் ஜார்ஜ் த/பெ. முத்து

திரு.S.சிவானந்தம், III ம் நிலை உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் பிஸ்னஸ் செய்து வருகிறேன். பிரதிவாதி யார் என்று எனக்கு தெரியுமா என்றால் வாதியிடம் பேசிக் கொண்டு இருந்தேன். அப்போது பிரதிவாதி வந்தார். வாதியின் வீட்டில் பேசிக் கொண்டு இருக்குபோது பிரதிவாதி அங்கு வந்தார். 10.06.2017 ல் அவர் வரும்போது காலை 10.30 மணி இருக்கும். தாவா புரோநோட்டில் நான் முதலாவது சாட்சியாக கையெழுத்து செய்தேன். மற்றொரு சாட்சி ராஜு. புரோநோட்டில் அனைத்தும் ஏற்கனவே நிரப்பப்பட்டு இருந்ததா என்றால் இங்கு வந்த பின்னனர் தான் நிரப்பினார்கள். தமிழ் மாதம் எழுதப்பட்டு இருந்ததா என்றால் இல்லை. ஆங்கில மாதம் தான் எழுதப்பட்டு இருந்தது. பணத்தை எப்படி கொடுத்தார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. பிரதிவாதி என்ன பிஸ்னஸ் செய்து வருகிறார் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதி வாதியிடம் பணம் கேட்டதாகவும் அதை கொடுக்கப்போவதாகவும் வாதி என்னிடம் சொன்னார். வாதி எனக்கு கடந்த 10 லிருந்து 15 ஆண்டுகளாக பழக்கம். இந்த ஒரு புரோநோட்டில் தான் நான் சாட்சியாக கையெழுத்து போட்டுள்ளேன். வாதி எனக்கு நண்பர் என்பதால் நான் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நிரப்படாத புரோநோட்டில் பிரதிவாதி

கையெழுத்து போட்டதை வைத்துக் கொண்டு  வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.

ஒம்/- வின்சென்ட் ஜார்ஜ்

நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சாட்சி விசாரித்து தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் வாக்கு மூலத்தை படித்து காண்பிக்கப்பட்டு சாட்சி ஒப்புதல் அளித்து என்னால் சரிபார்த்து கையெழுத்திடப்பட்டது.

V JAIKUMAR Digitally signed by V JAIKUMAR

சார்பு நீதிபதி,
முசிறி.